# மெட்ரோ ரயில் பெட்டிகள் இன்று சென்னை வருகை

**சென்னை, டிச. 6–**

மெட்ரோ ரயில் திட்டத்தில், கடைசி ரயிலுக்கான, நான்கு பெட்டிகள், ஆந்திராவில் இருந்து, இன்று சென்னைக்கு வருகின்றன.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.



இந்த ரயில் போக்குவரத்துக்கு, பிரேசிலில் இருந்து, 42 ரயில்களுக்கான, 168 பெட்டிகள் வாங்கப்பட்டன.

பிரேசிலில் இருந்து, ரயில் பெட்டி பாகங்கள், கப்பலில் எடுத்து வரப்பட்டு, ஆந்திர மாநிலம், ஸ்ரீசிட்டியில் உள்ள ஆல்ஸ்டாம் ரயில் பெட்டி தொழிற்சாலையில் ஒருங்கிணைக்கப்படுகிறது.

இதுவரை, 41 ரயில்களுக்கான, 164 பெட்டிகள், கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனைக்கு கொண்டு வரப்பட்டு, ரயில் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில், கடைசி ரயிலுக்கான, நான்கு பெட்டிகள், ஸ்ரீசிட்டி தொழிற்சாலையில் இருந்து, சென்னை கோயம்பேட்டுக்கு இன்று வருகின்றன.